முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஏயர்கோன் கலிக்காம நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

20.11.2018, செவ்வாய்க்கிழமை

1. **அருட்பெருஞ் சக்தியே அரங்கா**
**அண்ணலே அன்னதான வள்ளலே**
**அருட்சுடரே அரங்கமகா தேசிகா**
**அகிலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தேள் திங்கள்**
**தெரியவே சதுர்திகதி குசன் வாரம்**
**தேசிகனுக்கு ஏயர்கோன் கலிக்காம நாயனாரும்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 4ம் நாள் 20.11.2018, செவ்வாய்க்கிழமை)**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உலகத்தில் அரங்கன் சுத்தநெறி
ஞானயுகம் அமைக்கும் நெறியாக
ஞானிகள் பலமாக பரவி வர
4. வருகவே அரங்கன் தலைமை
வையகம் ஏற்கின்ற காலம்
ஆறுமுகனார் ஆளுமை பெறும்
அரசியல் தூய்மை நிலை காணும்
5. காணவே சுத்தவான்களே
கலியுகத்தில் மேல் பதவிக்கு வந்து
ஞானவழி உண்மை ஆட்சியாக
ஞானிகள் ஆட்சியாக நடத்தி சிறப்பர்
6. சிறப்பு தரும் அரங்கன் சேவை
செப்பிடுவேன் கலியுகத்தாரை
மறுப்பில்லா மீட்க இருக்க
மக்களே சரணடைந்து வாரீர்
7. வாரீர் அரங்கன் வாழும் ஞான
வள்ளல் குடிலுக்கு வந்துமே
தாரீர் பொருளுதவி தருமவழி
தரும பலம் பெருக்கி வர
8. வருகவே ஆறுமுகப் பெருமான்
வரங்கள் தந்து மக்களை
பெருமாற்றம் அருளி மீட்கவே
பேராசான் வழி வரும் மக்கள் எல்லாம்
9. எல்லோரும் தருமவான்களாவதுடன்
எக்காலமும் நிலைத்திருக்கும்
வல்லமையாம் அழியாமை பெறுவர்
வாழும் காலமே அரங்கன் மூலம்

10. மூலமாக வடிவேலன் காட்சி
மொழிகுவேன் ஞான சித்திகளும்
காலனை வெல்லும் பலமும்
கலியுகத்தில் ஞானி ஆகும் வாய்ப்பும்

11. வாய்ப்பும் கண்டு தேறுவர்
வல்லமை கூடி மீளுவர்
மெய்ஞானம் சர்வயோக சித்தி
முழுமை கண்டு அழியாமை பெறுவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் ஏயர்கோன் கலிக்காம நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா அருள்பலம் கொண்டிட்ட அருட்பெருஞ்சக்தியே அரங்கமகா தேசிகனே அண்ணலே அளவிலாது உலக உயிர்களின் பசிப்பிணி போக்கிய அன்னதான வள்ளலே அருட்பெருஞ்ஜோதி சுடரே ஆறுமுக அரங்கமகா தேசிகனே இவ்வுலகினில் அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 4ம் நாள் 20.11.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே ஏயர்கோன் கலிக்காம நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ஏயர்கோன் கலிக்காம நாயனார்.

உலகினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் சுத்தநெறியே ஞானயுகத்தினை அமைக்கும் வல்லமைமிக்க நெறியாகும். உலகினில் ஞானயுகம் அமைத்திட அரங்கனின் தூயநெறியானது ஞானிகளின் பலத்துடன் பரவி வருகின்றதப்பா. ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமையினை இவ்வுலகம் ஏற்கின்ற காலத்திலே இவ்வுலகம் முருகப்பெருமானின் தலைமையில் ஆட்சியை பெற்றிடும். அப்பொழுதுதான் இந்த உலகின் அரசியலில் தூய்மை நிலை காணும்.

அரசியலில் தூய்மை பெற தூய மனமுள்ள சுத்தவான்களே கலியுகத்தினில் பதவிகளுக்கு வந்து பதவி வகித்து இவ்வுலகை ஞானவழியில் உண்மையான ஆட்சியாக ஞானிகளின் ஆட்சியாக நடத்தி சிறப்படைவார்கள்.

சிறப்புகளை தந்தருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சேவைகள் கலியுகத்தினரை மறுப்புகள் ஏதும் இன்றி மீட்க இருக்கின்றதப்பா. ஆதலினால் உலக மக்களே உடன் அரங்கனை நாடிச் சென்று அரங்கன் திருவடி பணிந்து சரணடைந்து கடைத்தேறிட வாரீர் வாரீர், அரங்கன் வாழும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு.

ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வந்துமே அரங்கன் திருவடி பணிந்து ஆங்கே நடக்கும் தானதரும பணிகளுக்கு தாராளமாய் பொருளுதவிகளைச் செய்து தருமத்தின் வழியில் சென்று தருமபலத்தினை பெருக்கி வரவர, முருகப்பெருமானும் தருமவழி செய்கின்ற அவர்களுக்கு வரங்களைத் தந்து உலக மக்களுக்கு பெருமாற்றம் தந்து அருள் செய்து மீட்பார்.

முருகப்பெருமானின் அருளினால் பேராசான் அரங்கமகா தேசிகனாரின் தருமவழியில் ஞானவழியில் வருகின்ற மக்களெல்லாம் தருமவான்களாக ஆவதுடன் எக்காலமும் நிலைத்திருக்கும் வல்லமையான அழியாமை எனும் அழிவிலாமையாகிய மரணமிலாப் பெருவாழ்வை பெற்று சிறப்படைவார்கள்.

அவர்கள் வாழும் காலத்திலேயே ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக முருகப்பெருமானின் காட்சியைப் பெற்று ஞானசித்திகளையும் அடைந்து காலனாகிய எமனையும் அதாவது மரணத்தை வெல்லும் பலமும் இக்கலியுகத்திலும் ஞானியாக ஆகும் வாய்ப்பையும் பெற்று கடைத்தேறுவார்கள். அவர்களெல்லாம் சர்வவல்லமைகளைப் பெற்று பிறவிப் பெரும் பிணியிலிருந்து மீள்வார்கள். மெய்ஞானமும் பெற்று சர்வயோக சித்திகளையும், முழுமையாக அடைந்து அழியாமையாகிய மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்று சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் ஏயர்கோன் கலிக்காம நாயனார்.

–சுபம்–